# விபஸ்ஸனா
## செய்தி மடல்
### தமிழ் மாத இதழ்

(விபஸ்ஸனா: ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை)

மலர்: 1 ★ இதழ்: 12 ★ மார்கழி: 2022 ★ விலை: ₹ 2.50/- ★ ஆண்டு சந்தா : ₹ 30/-


**தம்ம வாக்கு**

பமாத அப்பமாதேன, யதா நுததி பண்டிதோ;
பஞ்ஞுபஸாதமாருய்ஹ, அஸோகோ ஸோகோனிம் பஜங்;
பப்பத்தஹோவ புமத்தே, தீரோ பாலே அவெக்கதி

அறிவுள்ள ஒருவர் விழிப்புணர்வு மூலம் அறியாமையை
அகற்றும் போது, சோகத்திலிருந்து விடுபட்ட அவர்,
ஞானத்தின் மாளிகையை சென்றடைந்து, திறமையுள்ள
மலையேறும் ஒருவர் தரையில் வாழ்வோர்களைபார்ப்பது
போல, இவரும் துன்புறும் கூட்டத்தை பார்ப்பார்.

தம்மபதம் 28,
அப்பமாதவக்கோ, விழிப்புணர்வு தொகுப்பு

# புத்தரின் எல்லையற்ற சகிப்புத்தன்மையும் கருணையும்

## (திரு. சத்ய நாராயண கோயங்கா)

புத்தரது சகிப்புத்தன்மையானது இமய மலை சிகரம் போன்றதாகும்; புயல்களும் சூராவளிகளும் எத்தனை தோன்றினாலும் என்றும் சலனமற்றே இருக்கிறது. அவரது பரிவிரக்கமும் கருணையும் எத்தனை அளவு தண்ணீரை எடுத்தாலும், நீர் வளம் குறையாத பண்பினைக் கொண்ட அறிய இயலாத ஆழமுடைய பெருங்கடல் போன்றதாகும். புத்தர் தமது வாழ்நாளில் பல அவதூறுகளையும் அவமானங்களையும் சந்தித்துள்ளார். ஆனால், அவ்வாறு செய்பவர்கள் மீது அவர் கொண்ட பொறுமையும் அன்பும் என்றும் குறைந்ததில்லை.

(1)

### மகத நாட்டு வாசிகளின் பழிச்சொல்:

புத்த பிக்குகளை கண்டதும், பல மகத நாட்டினர் பின்வரும் பழிச்சொற்களை மொழிந்தனர்...

"இந்த ஸமணர் மகத நாட்டு பூமியை குழந்தை செல்வமற்று ஆக்குகிறார். அவர் பெண்களை விதவைகளாக ஆக்குகிறார். குலத்தையே அழிப்பவராக திகழ்கிறார். அவர் பல்லாயிரக்கணக்கான ஜடாமுடி துறவிகளை தமது சீடர்களாக மாற்றி விடுகிறார். அவர் தம் பிடியில் ஓராயிரத்திற்கும் மேலுள்ள பரிவிராஜகர்களை தம் வசத்தில் வைத்துவிட்டார். இப்போது, மகத நாட்டின் பேர்பெற்ற குடும்பங்களின் புதல்வர்களும் இவரது போதனையை ஏற்க தொடங்கிவிட்டனர்."

"இந்த மாபெரும் ஸமண கௌதமர் மகத நாட்டின் இராஜகிரஹத்திற்கு வந்துள்ளார். அவர் பலரையும் தம் சீடர்களாக மாற்றிவிட்டார். இன்னும் எவ்வளவு பேர் அவரது பிடியில் சிக்கப் போகிறார்களோ?" என்று கிண்டலான கருத்துக்களையும் மொழிந்தனர்...

இவற்றையெல்லாம் தனது சீடர்கள் மூலமாக புத்தர் கேட்டதும், அவர் கூறியதாவது... "துறவிகளே! நீண்ட காலம் இம்மாதிரியான நையாண்டி பேச்சுக்களை நீங்கள் கேட்க மாட்டீர்கள். மக்கள் ஓரிரு வாரங்களுக்கு இவ்வாறு செய்யலாம், ஆனால், அதன்பின், அவர்கள் தாமாகவே அமைதியாகிவிடுவர்.

## (2)
## சுபிரிய பரிவராஜகனின் நிந்தனை: (பரிவராஜகன்: தேசாந்தர துறவி)

புத்தர் சில சீடர்களுடன் இராஜகிரியிலிருந்து நாலந்தாவிற்கு சென்று கொண்டிருந்தார். அச்சமயம், சுபிரிய என்னும் பரிவராஜகன் அவரது மாணவனான பிரம்மதத்தனுடன் புத்தரை பின் தொடர்ந்து சென்றார்.

வழிமுழுவதும், சுபிரியன் புத்த, தம்ம மற்றும் சங்கத்தைப் பற்றி அவதூறாகவே பேசிக் கொண்டும், அவரது சீடர் பிரம்மதத்தனோ புத்த தம்ம மற்றும் சங்கத்தைப் பல வழிகளில் புகழ்ந்து கொண்டும் இருந்தனர்.

இரவில், அனைவரும் ஒரே இடத்தில் தங்கினர். இரவு முழுவதும் கூட, இருவரும் இவ்வாறான பேச்சினை தொடர்ந்துகொண்டே இருந்தனர். புத்தரின் சீடர்களும் குறுக்கீடு செய்யாமல் இவற்றை கவனித்துக்கொண்டிருந்தனர்.

புத்தர் தம் சீடர்களைப் பாராட்டினார். ஒருவர் பிறரால் புகழப்படும் போது மகிழவும் கூடாது, இகழப்படும் போது பதற்றமும் கொள்ளக்கூடாது என புத்தர் அறிவுறுத்தினார்.

## (3)
## நிக்ரோத பரிவராஜகனின் நிந்தனை:

"சமண கௌதமர் சிற்றறையில் தியானம் செய்ததால் தமது அறிவை இழந்துவிட்டார். அவரது ஞானம் குன்றிவிட்டது. அவர் எனது எந்தவொரு கேள்விக்கும் பதிலளிக்கப் போவதில்லை." என புத்தரை கடுமையாக விமர்சித்தார்.

ஆனால் புத்தரை அவர் நேரில் தரிசித்ததும், அவரது அமைதி மற்றும் ஞானத்தை கண்டதும் சிரம் தாழ்த்தி வணங்கினார்.

## (4)
## ஆக்ரோஷக பிராமணரின் நிந்தனை:

குரோதத்தில் கொந்தளித்துக் கொண்டு, அவர் புத்தர் அருகில் வந்து கடுமையான வார்த்தைகளில் நிந்தித்தார்.

அதை கேட்ட புத்தர்...

"இவைப் போன்ற வசை சொற்கள் ஒருவருக்கு ஒருவர் பரிசளித்துக்கொள்வது போலாகும். நான் இதில் பங்கேற்பதில்லை. அவதூறின் இந்த பரிசுகளை நீங்கள் எனக்கு அளித்துள்ளீர்கள், ஆனால், இவை உங்களிடமே இருந்து விடுகிறது. நான் அவைகளை ஏற்பதும் இல்லை பதிலுக்கு திரும்ப அளிப்பதும் இல்லை. உங்கள் பரிசுகள் உங்களிடமே இருந்து விடுகின்றன." என்று பதிலுரைத்தார்.

ஒரு முன்கோபியாக இருந்தும் கூட, ஆக்ரோஷக பரத்வாஜர் புத்திசாலியாக திகழ்ந்தார். நாள் முழுவதும் நாம் ஒருவருக்கொருவர் இவைப் போன்ற பரிசுகளை பரிமாறிக்கொண்டே இருக்கின்றோம். ஆனால், இங்கே இம்மனிதரோ எந்தவொரு பரிசையும் வாங்காமல் இருப்பதோடு மௌனமாகவும், சகிப்புத்தன்மையுடன் மிகவும்அமைதியாகவும் சலனமின்றியும் இருக்கின்றார் என்று அவர் உடனே உணர்ந்தார். இதனை பார்த்தும் புரிந்துகொண்டும் அவர் புத்தரின் சிரத்தைமிகு சீடராகிறார்.

## (5)
## அக்கிக பாரத்வாஜரின் நிந்தனை:

யாசகத்திற்காக வீடுவீடாக சென்று கொண்டிருக்கையில், புத்தர் அக்கிக பாரத்வாஜர் வீட்டை வந்தடைந்தார். அவரை கண்டதும் அக்கிக பாரத்வாஜர் சினங்கொண்டு கொதித்தார்.

“மொட்டை தலையுடையவரே, அங்கேயே நில்! ஸமனரே அங்கேயே நில்! தீண்டத்தகாதவரே, அங்கேயே நில்!” என கொதித்தார். கீழ் சாதியினரின் பாக்கியமில்லா நிழல் கூட அவர் வீட்டின் மேல் வர அவருக்கு விருப்பம்இல்லை.

இதைக் கேட்டதும், புத்தர் அவருக்கு யார் தீண்டத்தகாதவன் என்பதைப் பற்றியும் எவ்வாறு ஒருவர்தீண்டத்தகாதவன் ஆகின்றார் என்பதைப் பற்றியும் விளக்கினார். கருணை கொண்ட புத்தரிடம் விளக்கத்தைகேட்டும் அவற்றை புரிந்து கொண்டும், பாரத்வாஜர் புத்தரின் சிரத்தைமிகு சீடராகிறார்.

## (6)
## மாகநீய பரிவராஜகரின் நிந்தனை:

புத்தர் பயன்படுத்திய ஆசனத்தை கண்டதும், “கருவை அழிப்பவரான புத்தரின் அமங்களகரமான இருக்கையை நான் கண்டுவிட்டேனே” என மாகனீய பரிவராஜகர் வினவினார்...

இவை போன்ற கடுஞ்சொற்களையும் புத்தர் சலனமின்றியும் அமைதியுடனும் சகித்துக் கொண்டார்.

## (7)
## சிங்க தளபதியின் நிந்தனை:

ஒருமுறை சிங்க தளபதி புத்தரிடம் எந்தவொரு திவ்ய சக்திகளும் இல்லை என்ற சந்தேகத்தை கிளப்பினார். அதற்கு, தமது போதனை திவ்ய சக்திகளை வெளிப்படுத்த அல்ல, மாறாக, துன்பத்திலிருந்து முழு விடுதலைஅடைவதற்காகவே என புத்தர் விளக்கினார். இதனை கேட்டும் சரிவர புரிந்துகொண்டும் அவர் புத்தரின் சிரத்தைமிகு சீடராகிறார்.

## (8)
## சிஞ்சா மாணவிகாவின் நிந்தனை:

ஒரு கர்ப்பிணி போல வேடம் அணிந்துகொண்டு, சிஞ்சா ஒரு சபையில் புத்தரை அனுகி

“கேளுங்கள், மாபெரும் துறவியே, என் கருவில் இருக்கும் உனது குழந்தையின் பிறப்புக்கு நீங்கள் ஏதும் செய்யமுடியாவிட்டால், தங்களின் செல்வமிகு சீடர்களிடமாவது உதவி கேளுங்கள்.” என கடும் நிந்தனை செய்தாள்.

தவறான இந்த குற்றசாட்டினைக் கேட்டதும் புத்தர் “சகோதரி, உனது குற்றச்சாட்டின் உண்மையும் பொய்யும் நம் இருவருக்குமே தெரியும்.” என அமைதியாக கூறினார். இதை கேட்ட பின்னரும், சிஞ்சா அதே குற்றச்சாட்டை மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டே இருந்தாள். ஆனால், தமது குற்றச்சாட்டால் புத்தர் மீது எந்தவித தாக்கமும் ஏற்படவில்லை என அறிந்த அவள் குழப்பமடைந்து, வயிற்றில் தாம் கட்டிய கயிறு அவிழ்ந்து கீழே விழுந்தது; உண்மையும் வெளிப்பட்டது. அங்கிருந்த மக்கள் யாவரும் அவளை கண்டித்தனர். புத்தர்அமைதியுடனும் சலனமின்றியும் பிரகாசித்தார்.

## (9)
## சுந்தரி பரிவராஜிகாவின் நிந்தனை:

புத்தரை எந்தவொரு வகையிலும் இகழ இயலாமல், அவரது பகைவர்கள் இறுதியாக ஒரு திட்டத்தை தீட்டினர். அவர்கள் சுந்தரி என்னும் பெண் துறவியை ஜேதவன துறவில்லத்துள் யாரும் அறியா ஒரு இடத்தில் கொலை செய்து போட்டனர். அதன் பின் அந்த சடலத்தை எடுத்துக்கொண்டு அவர்கள் நகர உலா வந்து, புத்தரின் சீடர்கள் ஒழுக்கமற்றவர்கள் மட்டுமல்ல கொலையாளிகளும் கூட என கடும் அவதூறை பரப்பினர். புத்தர்அவர்தம் சீடர்களுக்கு அமைதியை வலியுறுத்தி, இம்மாதிரியான தவறான குற்றச்சாட்டு ஒரு வாரத்திற்கு மேல் நீடிக்காது என ஊக்கமளித்தார். புத்தர் கூறியபடி அவ்வாறே நடந்தது. சீடர்களும் அமைதி காத்து, காலப்போக்கில் உண்மையும் வெளிவந்தது.

## (10)
## அம்பட்ட மாணவனின் நிந்தனை:

அம்பட்ட மாணவன் புத்தர் வசிக்கும் இடத்திற்கு சென்று, “கௌதம புத்தரும் அவர் சீடர்களும் ஒழுக்கமற்றவர்கள்.” என அவரை நிந்தித்தார். அவரது சாக்கிய குலத்தை இழிவுபடுத்தியபடி, “அவர்கள்அனைவரும் கடுமையும் மூர்க்கத்தனமும் உடையவர்களாவர். அவர்கள் பிராமணர்களை மதிப்பதும் இல்லை வணங்குவதும் இல்லை. ஆகவே அவர் அனைவரும் பாவிகளாவர்” எனவும் கண்டித்தார். இதைக் கேட்ட புத்தர்அவரிடம் மிக அமைதியுடனும் பொறுமையுடனும் யார் வணங்கத்தக்கவர்கள் யார் பாவிகள்

என விளக்கினார். இதை கேட்ட அம்பட்ட மாணவன் மௌனமாக அமர்ந்து கொண்டார்.

## (11)
## மாகண்டியாவின் நிந்தனை:

மாகண்டியவின் மகளான மாகண்டியா மிகவும் அழகானவள். அவளுக்காக ஒரு நல்ல அழகான கணவரை அவரதுதந்தையார் மாகண்டிய தேடிக்கொண்டிருந்தார். அவர் புத்தரைக் கண்டதும் அவரது ஒப்பற்ற ஆளுமையால் மிகவும் ஈர்க்கப்பட்டார். அவரது மகளுக்கான ஒரு நல்ல கணவராக இவர் இருப்பார் என தந்தை எண்ணினார். அவர் தமது மனைவியையும் மகளையும் அங்கழைத்தார்.

புத்தர் தம் மகளை திருமனம் செய்து கொள்ள வேண்டும் என அவர் முன்மொழிந்தார். கேட்ட மாத்திரத்திலேயே புத்தர் இதனை நிராகரித்தார். அவளது அழகை தந்தை வர்ணிக்கும்போது, புத்தர் "இவளை நான் எவ்வாறு என் மனைவியாக ஏற்றுக்கொள்ள முடியும்? என் கால்களால் கூட இவளை தீண்ட முடியாதே?" என புத்தர் பதிலுரைத்தார். பிறகு, அவர் தம் பூரண மெஞ்ஞானத்தைப் பற்றி விளக்கினார். அதை கேட்டதும், மாகண்டியரும்அவரது மனைவியும் புத்தரிடம் புகலிடம் சென்று விரைவிலேயே பூரண மெஞ்ஞானத்தை அடைகின்றனர்.

புத்தரால் நிராகரிக்கப்பட்டபின், மகள் மாகண்டியாவின் மனது புண்பட்டது. பிற்காலத்தில், அவரது மாபெரும்அழகின் விளைவாக, அவள் கோஸம்பி நாட்டு மன்னரை திருமனம் செய்து கொள்கிறாள். அவர் பட்டத்து அரசியாகிறாள். ஆனால், புத்தரால் ஏற்பட்ட காயத்தை அவளால் மறக்க முடியவில்லை. ஒருமுறை, பகவான் புத்தர் ஆனந்தருடன் அந்த நகரத்திற்கு வருகிறார். அவர்களை கண்டதும் அவள் தனது பணியாட்களிடம் புத்தரைப் பிந்தொடர்ந்து "கௌதமரே, நீங்கள் ஒரு திருடர், அறிவிலி, ஒட்டகம், எருது, கழுதை, மிருகம், நரகத்திற்கு ஏற்ற பிராணி! நல்ல பிறவி அடையத் தகுதி இல்லா ஜீவன்!" என்றெல்லாம் கூறும்படி வலியுறுத்தினார்.

அவர்களும் புத்தரை இவ்வாறான கடுங்சொற்களைக் கொண்டு அவமதித்தனர். இதைக் கண்ட ஆனந்தர் புத்தரிடம் - "பகவானே, பண்பாடில்லா இவர்கள் தங்களை அவமதிக்கின்றனர். ஆகவே நாம் ஏன் வேறொரு நகரத்திற்கு செல்லக் கூடாது?" என விண்ணப்பித்தார். அதற்கு பகவான் புத்தர் - " எப்படியானாலும், மற்றொரு நகரத்தார்களும் நம்மை பண்பாடற்று பேசினால், நாம் எங்கு செல்வது?" என பிரதி கேள்வி எழுப்பினார்.

ஆனந்தா, நான் ஒரு போர் யானைப் போன்றவன். ஒரு போர் யானை எவ்வாறு நான்கு திசைகளிலிருந்தும் வரும் அம்புகளை சகித்துக் கொள்கிறதோ அவ்வாறே நானும் பல ஒழுக்கமில்லா மனிதர்களிடமிருந்து வரும்குற்றச்சாட்டுகளைப் பொறுத்துக் கொள்கிறேன். புகழ்ச்சி எவ்வாறோ அவ்வாறே இகழ்ச்சி. இவ்விரு சூழ்நிலைகளிலும் சமநிலையுடன் இருப்பதே உண்மையான தம்மமாகும்.

பல தருணங்களில் பல வழிகளில் புத்தர் தம் வாழ்நாளில் கடும் நிந்தனைக்கு ஆழ்த்தப்பட்டார். ஆனால் அவர் ஒரு புத்தர் ஆயிற்றே! இவைப் போன்ற குற்றச்சாட்டுகளால் அவர் எவ்வாறு சலனமடையக் கூடும்! அவரது சகிப்புத் தன்மை இமய மலையின் சிகரம் போன்றதாகும். தம்மீது குற்றச்சாட்டுகள் கூறியோரிடம் அவருக்கு வெறும் அன்பு மட்டுமே வழிந்தோடியது. அவரது பரிவிரக்கம் ஆழமறியா பெருங்கடல் போன்றதாகும்.

அவரது புகழ் மீதும் போதனை மீதும் வெறுப்புண்டு கிடப்பவர்களிடமிருந்தே பெரும்பாலும் குற்றச்சாட்டுகள் வருவதுண்டு. அவரது போதனை பரவாமல் இருப்பதற்காக, எப்படியாவது அவரை அவதூறுக்கு உள்ளாக்கவேண்டும் என்பதே இவர்களின் நோக்கமாக இருந்தது.

புத்தரின் கௌரவமிக்க பதவியைக் கைபற்ற தேவதத்தன் மிகவும் ஆயத்தமாக இருந்ததால் இவரும் புத்தரைக்கடுமையாக நிந்தித்தார். ஆனால் புத்தருக்கு அவர் மேல் வெறும் அன்பு மட்டுமே இருந்தது. ஒருமுறை அவர்புத்தரைப் பற்றியும் அவர்தம் போதனைப் பற்றியும் தவறான வதந்திகளைப் பரப்பி பிட்சு சங்கத்தின் ஐந்நூறு துறவிகளை சங்கத்திலிருந்து பிரிய வலுயுறுத்தி தமது போலியான ஆளுமையை நிலைநாட்ட முயற்சித்தார். சங்கத்தை பிரித்து, அதில் ஒரு பிரிவை தாம் எடுத்துக்கொள்ள நினைத்தார். ஆனால் இந்த தீய திட்டத்தில் அவர் வெற்றிபெற முடியவில்லை.

பிறகு நாடாளும் அரசர் பிம்பிசாரர் புத்தரின் மாபெரும் சீடர் என அவர் நினைத்தார்.

அரசர் உயிருடன் இருக்கும்வரையில் புத்தரின் பெயரும் புகழும் பரவிக்கொண்டே தான் இருக்கும். எனவே, இளவரசர் அஜாதசத்ருவை ஆட்கொண்டு அவர் மூலமாக தம் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்னும் தீய எண்ணம் அவருள் உதித்தது.

அவர் அதை செய்தார். ஒருசில சித்திகளை வெளிபடுத்தி அவர் அஜாதசத்ருவை மயக்கினார். பிறகு அவர் அஜாதசத்ருவிடம் "உங்கள் தந்தை பிம்பிசாரர் நீண்ட காலம் வாழ போகிறார். அவர் உயிருடன் இருக்கும் வரை நீங்கள் அரசராகவும் ஆக இயலாது, அரச போகங்களையும் அனுபவிக்க இயலாது. ஆகவே, அவரை கொலை செய்து பதவியை கைபற்றுங்கள்" என தூண்டினார்.

அஜாதசத்ரு தன் தந்தையான அரசர் பிம்பிசாரரையே கொலை செய்ய தூண்டப்படுகிறார். ஆனால் அந்த முயற்சியில் அவர் தோற்றுப் போகிறார். தமது மகனுக்கு அரசனாக வேண்டும் என தீவிர ஆசையைக் கண்ட அரசர் பிம்பிசாரர் மகன் மீது கருணைக் கொள்கிறார். ஆகவே அவர் சுய விருப்பத்துடன் அரச பதவியைத் தியாகம் செய்து தன் மகனுக்கு அளித்து விடுகிறார்.

தேவதத்தன் இதில் திருப்தி அடையவில்லை; ஏனெனில், மக்கள் பிம்பிசார அரசராக இல்லாத போதும் அவர் மீது அதிக மதிப்பு வைத்திருந்தனர். அஜாதஸத்ரு அவரை கொலை செய்ய முடியாவிட்டாலும், சிறையில் அடைக்க தூண்டி உணவு அளிக்காமல் சாகடிக்கிறார்.

தேவதத்தன் மகிழ்ந்தான். எனது சீடர் அரசராக இருக்கும் பட்சத்தில் நான் ஏன் அச்சம் கொள்ள வேண்டும்? ஆகையால் அவர் புத்தரை கொலை செய்ய பல முயற்சிகளை மேற்கொள்கிறார். ஆனால் ஒவ்வொரு முறையும் அவர் தோற்கிறார். புத்தர் இமய மலைச் சிகரம் போல சலனமடையாமல் திகழ்ந்தார். அவரது அன்பு ஆழமாகவும் எல்லையற்றும் இருந்தது.

இவை போன்ற சம்பவங்கள் புத்தரது இரண்டு குணங்களின் குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டுகளாக அமைகிறது.

ஒருமுறை தேவதத்தன், சில பணியாட்களின் உதவி கொண்டு நாலாகிரி என்னும் மதம் கொண்ட யானைக்கு மது அளிக்க தூண்டுகிறார். பிறகு அந்த யானையை புத்தர் செல்லும் வழியில் விட்டனர். தும்பிக்கைகளுடன் பீறிட்டுக் கொண்டு அந்த யானை புத்தரை நோக்கி வந்தது. அருகிலுள்ள வீட்டில் அடைக்கலம் எடுத்துக்கொள்ள சீடர்கள் புத்தரை வலியுறுத்தினர். ஆனால் புத்தர் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அவர் சலனமற்று உறுதியாக நின்றார். பீறிட்டு கொண்டு வந்திருந்த யானை புத்தரை நோக்கி வேகமாக வந்தது. புத்தர் அந்த யானை மீது கருணையை பொழிந்தார். அதன் விளைவாக யானையின் கோபமும் தணிந்தது. அது மட்டுமல்லாமல் அது புத்தரிடம் மண்டியிட்டு அவரை வணங்கியது. புத்தர் எல்லையற்ற கருணை கொண்ட தமதுகைகளால் அதனை தடவி கொடுத்தார். நாலாகிரியின் மனம் மகிழ்ந்து உணர்ச்சிப் பிரவாகத்தில் ஓடியது. தமது முதுகை காட்டாமல் புத்தரை பார்த்தபடியே நாலாகிரி பின் நோக்கி சென்றது.

புத்தரது சலனமில்லா சகிப்புத்தன்மையும் ஆழமான அன்பும் இவ்வாறே இருந்தது.

புத்தரின் வாழ்க்கையிலிருந்து நாமும் பாடம் கற்று உற்சாகத்தை வளர்க்க வேண்டும். ஒருவர் நம்மை குறை கூறுகையில், அதில் ஏதேனும் உண்மை இருந்தால் நாம் உடனடியாக திருத்திக் கொள்ள வேண்டும். உண்மை ஏதும் இல்லையெனில், கடுங்குற்றம் சாட்டினாலும் நாம் சலனமின்றியும் அவர்கள் மீது எல்லையில்லா அன்புடனும் இருக்க வேண்டும்.

இவ்வாறாக ஒரு தேவதத்தன் தனது பதவியை தக்கவைத்துக் கொள்ளவோ அல்லது தாம் அடையாத பதவியைஅடைவதற்கோ ஏதோவொரு சேட்டை செய்தால், இப்போதிருக்கும் அல்லது இனி வரும் தம்ம ஆசிரியர்கள்கலக்கம் அடையாமல் சலனமற்று இருக்க வேண்டும். தியானிகளும் கலக்கமற்று இருக்க வேண்டும். அரசாங்க சக்திக்கு அஞ்சாமலும் ஏதோவொரு செல்வந்தரிடம் தாக்கம் அடைந்து திசை மாறாமலும் இருந்துகொண்டு சகிப்புத் தன்மையுடனும் பொறுமையுடனும் தீய செயல் செய்பவர் மேல் அன்பை மட்டுமே நிலைநிறுத்த வேண்டும்.

இதுவே தம்மத்தின் செய்தியாகும். இதை செய்தாகவேண்டும். நம் அனைவரின் மகிழ்ச்சியும் இதில்அடங்கியுள்ளது. நம் அனைவரின் நலனும் இதில் தான் அடங்கியுள்ளது. ●